# தமிழ் நிலம்

உலகத் தமிழின முன்னேற்றக் கழக வெளியீடு

சிறப்பாசிரியர்

பாவலரேறு பெருஞ்சித்திரனார்

தி. பி. 2021 மீனம் (15,31-3-90) ஓர் உருபா (இதழ் எண்: 136)


# வேண்டுமென்றே கலைஞர் மேல் பழி சுமத்துகின்றனர்! தமிழன் ஆள்வது பார்ப்பனர்க்கு நெஞ்சைக் குத்துகிறது.

*'செயலலிதாமேல் கொலை முயற்சி'* என்றொரு பழி சுமத்தலை இந்திரா பேராயக் கட்சியினர் கலைஞர் கருணாநிதியின்மேல் சுமத்தினர். அதற்கிடையில் *'மறைமலையடிகள்—காமராசர்'* பெயர்வைப்புப் போராட்டத் தொல்லைகள்! அஃது ஆடி அடங்குவதற்குள் **'அரிசி விலையேற்றம்'** என்றொரு குற்றச்சாட்டு. அதன் பின்னர் **மதுவிலக்கு நீக்கம்-மலிவு விலை மது விற்பனை** என்னும் பெரிய பெரிய குற்றச்சாட்டு. அதன் பின் இப்பொழுது, இலங்கையினின்று வெளிவந்த அமைதிப்படை என்னும் **அழிம்புப் படையை வரவேற்காமை** என்னும் தேசப் பகையான பழி—என்றிவ்வாறு நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமுமான குற்றச்சாட்டுகளை அடுக்கடுக்காகப் பேராயக் கட்சியினரும், பார்ப்பனரும் தமிழக முதல்வர்மேல் அவிழ்த்து விட்டுக் கொண்டே உள்ளனர்.

• *'தினமணி'* இந்தியப் படையைக் கலைஞர் போய் வரவேற்காததைப் பற்றி ஓர் ஆசிரியவுரையில் (29-3-90) குற்றஞ்சாட்டி, இக் குற்றச்சாட்டுக்குக் கலைஞர் கூறிய விடையை இப்படி எழுதிக் காட்டுகிறது. **"என்னுடைய ஜாதியைச் சேர்ந்த தமிழர்கள்** ஐயாயிரம் பேர் கொல்லப்பட்டனர் என்ற நிலையை எண்ணிய காரணத்தினால்தான் நான் அங்கு செல்வது இயலாது என்பதாகி விட்டது" என்று கலைஞர் கூறினாராம்!

இதில், **"தமிழர்களை என்னுடைய ஜாதியைச் சேர்ந்தவர்கள்"** என்று எங்கே அவர் சொன்னார்? தினமணி ஐராவதப் பார்ப்பனருக்குத், தமிழர் என்றால்வேறு சாதியினராக—கலைஞரின் சாதியினராகப்படுகிறது எத்துணைக் காழ்ப்புணர்வு!

அமைதி காக்கச் சென்ற படையாம் அது! தமிழர்களைக் கொன்று குவிப்பதற்காக அஃது அங்கு செல்லவில்லையாம்! தினமணி பரிந்துரை செய்கிறது. "அமைதியைப் பாதுகாப்பதற்கும், தமிழர்களின் உரிமைக்காகவும் பாதுகாப்பிற்காகவும் சென்ற அந்தப் படையுடன், விடுதலைப் புலிகள் ஒத்துழைக்க மறுத்ததால்தான் அவர்களை அடக்க வேண்டிய **கடமைக்கு அமைதிப்படை** தள்ளப் பட்டதாம்!" என்று ஞாயம் பேசுகிறார் ஐ. மகாதேவன்.

பாதுகாப்பிற்கும், தமிழரின் உரிமையைக் காப்பதற்கும் சென்ற இந்தியப் படைதான் 6000க்கும் மேற்பட்ட தமிழர்களைக் கொன்று குவித்ததா? பல நூற்றுக்கணக்கான தமிழ்ப்பெண்களின் கற்பைச் சூரையாடியதா? அந்த வேட்டை நாய்கள் குடித்த தமிழரின் குருதியின் சூட்டைத் தமிழர்களின் நெஞ்சாங்குலை மறந்துவிட முடியுமா? தினமணிப் பார்ப்பனர் அதை மறந்து விடலாம். கலைஞர் மறக்க முடியுமா? அல்லது தமிழ்க் குருதி

(தொடர்ச்சி 3- ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# செய்திகள், உரைகள் செயல்கள்!

## கறுப்புப் பணம் ஒழிப்பு!

"நாட்டில் தோராயமாக உரு 40,000 கோடிக்குக் கறுப்புப் பணம் புழங்கி வருவதாக மதிப்பிடப் பெற்றுள்ளது. இ'து இன்னும் மிகுதியாகவும் இருக்கலாம். இ'து உருபா அளவில் உள்ளதாக மட்டுமே கணக்கிடப் பெற்றுள்ள தொகை. இதுவல்லாமல் மனைகள், கட்டடங்கள், தங்கம், நகைகள் போன்ற வடிவங்களிலும் கறுப்புப் பணம் உள்ளது." என்று பெங்களூர் பல்கலைக் கழகத் துணை வேந்தரும் மிகச் சிறந்த பொருளியல் வல்லுநருமான டி.எம்.நஞ்சுண்டப்பா கூறியுள்ளார்.

அவர் மேலும் கூறியதாவது "கறுப்புப் பணத்தால் பணவீக்கம் மிகுந்துள்ளது. கறுப்புப் பணப் பேர்வழிகள் வைப்பகக் கடனுதவி பெறுவதைத் தடுக்க வேண்டும். அரசின் தாராளக் கொள்கையால் ஆடம்பர நுகர் பொருள்கள் அளவிறந்து புழக்கத்துக்கு வந்துள்ளன. அதே பொழுது தேவையான உணவுப் பொருள்கள் பிற வாழ்க்கைத் தேவைப் பொருள்கள் ஆகியவற்றின் விலை குறையவில்லை; மாறாக ஏறிக் கொண்டே போகிறது. அதனால் ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைப் பாடு மிகுந்த தொல்லைகளுக்குள்ளாகியுள்ளது. அவர்கள் உண்மையிலேயே கசக்கிப் பிழியப் படுகிறார்கள். நடுத்தர மக்களிடம் கூட பேரளவு வாங்கும் ஆற்றல் அதிகமாகியுள்ளது.

கறுப்புப் பணத்தைப் பயனற்றதாகச் செய்ய ஒரே வழி புழக்கத்தில் உள்ள உருபாத் தாள்களையும் நாணயங்களையும் திரும்பப் பெற்றுக் கொண்டு புதியதாக நாணயங்களை மட்டும் அரசு வெளியிடலாம்."

—*செய்தி.*

## தேர்தல் தில்லுமுல்லுகள் பற்றித் தொலைக்காட்சியில் படம்!

கடந்த திசம்பர் '89-3-ஆம் பக்கல் தொலைக் காட்சியில் எதிர்பாராத வகையில் ஒரு படம் காட்டப் பெற்றது. எப்படியோ கட்டுக் காவல்களை மீறியே அந்தப் படம் தொலைக் காட்சியில் காட்டப் பட்டு விட்டது என்றே சொல்லுதல் வேண்டும். அதில், வட இந்தியாவில் இரு தொகுதிகளில் நடந்த தில்லுமுல்லுகள் வெளிப்படையாகக் காட்டப் பெற்றன.

தேர்தல்களில் ஒப்போலை (வாக்கு)ச் சாவடிகளைக் கைப்பற்றித் தங்களுக்கு வேண்டிய வேட்பாளர்களுக்கு, எல்லா ஒப்போலைகளையும் போடுவது எப்படி நடைபெறுகிறது; அதன் பின்னணி எவ்வளவு அதிர்ச்சியூட்டும் குடிநாயகப் படுகொலையாக உள்ளது; அதற்காக எவ்வளவு பணம் தண்ணீராகச் செலவிடப் பெறுகிறது; அந்தக் கொடுமையான செயலில் எத்தனைக் குண்டர்கள் ஈடுபடுகிறார்கள்; என்னென்ன வழிகளில் அவர்கள் சாவடிகளைக் கைப்பற்றுகிறார்கள் என்பன பற்றியும், இச் செயல்களில் முதிர்ச்சி பெறுதவற்றைத் தவிர, மற்ற எல்லா அரசியல் கட்சிகளுமே எவ்வாறு ஈடுபடுகின்றன—என்றெல்லாம் பொதுமக்களுக்கு நன்கு தெளிவு படுத்தும் வகையில், *நளினிசிங்* என்னும் பெண் செய்தியாளர் எடுத்துத் தொலைக்காட்சிக்குத் தந்த படம் அது. இது தொடர்பாக நளினிசிங் எழுதிய விளக்கக் கட்டுரையின் தமிழ் மொழி பெயர்ப்பு ஒன்றும் 15-12-89-ஆம் *தினமணியில்* வெளியிடப் பெற்றது.

## தேர்தல் தில்லுமுல்லுகளை ஒழிக்க தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் கருத்து!

"தேர்தலில் ஒப்போலைச் சாவடிகளைக் கைப்பற்றுபவர்கள் மிகவும் கொடுமையான திருடர்கள். மக்களரசின் மாண்பையே சீர்குலைப்பவர்கள். இவர்களின் கீழான நடவடிக்கைகளைப் பற்றிக் கூறுவதற்கே சொற்கள் இல்லை. இவர்களின் மீது கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். இவர்களுக்குத் தண்டமும், சிறைத் தண்டனையும் ஈவு இரக்கமின்றிக் கொடுக்கப் படுவதுடன், இவர்களின் நடவடிக்கைகளுக்குக் காரணமான—பொறுப்பான—வேட்பாளரைத் தேர்தலில் ஈடுபடாமல் விலக்கி வைக்க வேண்டும். ஒருவேளை அவர் ஏற்கனவே அமைச்சராக இருந்தால், இவர் அப்பதவியிலிருந்து விலக்கப் படுவதுடன் அவருக்குக் கடுமையான தண்டமோ, தண்டனையோ தருதல் வேண்டும்."—தேர்தல் குழுத்தலைவர் *பெரிசாத்திரி.*

## அனைத்து மாவட்டங்களிலும் அருங்காட்சியகம்!

'மாவட்டத்துக்கு ஓர் அருங்காட்சியகம்' என்னும் கொள்கையைத் தமிழக அரசு மேற்கொண்டுள்ளது. அதன்படி, கடந்த நவம்பர் மாதம் வரையில் மதுரை, திருச்சி, வேலூர், சேலம், ஈரோடு, உதகமண்டலம் ஆகிய இடங்களில் அருங்காட்சியகங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இவற்றைத் தொடர்ந்து விரைவில், திருநெல்வேலி, கன்னியாகுமரி, கோயம்புத்தூர், தருமபுரி ஆகிய மாவட்டத் தலைநகர்களிலும் அருங்காட்சியகங்கள் அமைக்கப் பெற விருக்கின்றன.

## சீக்கியர்களின் அரசியல் கொள்கை!

இப்பொழுதுள்ள பஞ்சாப் மாநிலத்துடன், அரியானா, இமாச்சலப்பிரதேசம், இராசத்தான் ஆகிய மாநிலங்களில் உள்ள சிற்சில பகுதிகளையும் இணைத்துச் சீக்கியர்களுக்கென ஒரு தனி மாநிலம்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(10-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அ) தமிழ்த் தேசப் பொருளியல் அமைப்பைப் பற்றிப் படித்தறிவோம்.

ஆ) பொதுவுடைமை அமைப்புகளைப் பற்றி ஆராயுங்கள்; அவை தமிழ்த்தேசிய இனத்திற்கு ஆற்றியப் பணி போட்ட தடை பற்றிக் கண்டறியுங்கள்.

**5. மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப் படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி.**

அ) அருவருப்பான கலைகளுக்கெதிராக நில்லுங்கள்.

ஆ) உயர்கலைப் படைப்புகளை 'அறிமுகம்' கொள்வதில் ஆர்வம் காட்டுங்கள்.

இ) புதிய படைப்புகளை—உருவாக்கும் படைப்பாளர்களைப் போற்றுங்கள்—அவர்களின் படைப்புகளை உரிய முறையில் ஆராய்ந்து வளர்த்தெடுங்கள்.

**6. பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்.**

அ) பழந்தமிழ் மரபு, மாந்தவியல் சிறப்புக் குறித்த நூல்களைப் பயில்தல்.

ஆ) தமிழினம் வாழும் பிற நாடுகளில், தேசங்களில் ஏற்பட்டுள்ள பண்பாடு குறித்து ஆராயுங்கள். நமக்கு இணக்கமான நாகரிக உறவுகளை ஏற்க வழிதேடுங்கள்.

**7. எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை.**

அ) நம்'அறிவியல்' அணுகுமுறை தமிழின முன்னேற்றத்திற்கு உறவுக்குப் பயன்படும் வகையைக் கண்டறியுங்கள்.

மேற்கண்ட பணிகளைத் தொடர முதலில்

(i) உ.த.மு.க. உறுப்பினர்களைக் கூட்டுங்கள். எண்ணிக்கை பெரிதன்று...உ.த.மு.க. கிளை எனப்பெயரிடுக.

(ii) தேவையான பொருள் செலவை நீங்களே தீர்மானியுங்கள் ..இது பற்றியும் உங்கள் நடைமுறை பற்றியும் செயல்படுத்தி உடனுக்குடன் 'அறிவிப்பு' அளியுங்கள்.

(iii) பொதுச் செயலரின் ஒப்புதலையும் கருத்துகளையும் கவனத்தில் வையுங்கள்.

(iv) தீர்மானிக்கும் உறுப்பினர் கட்டணத்தில் பாதியும் திரட்டுகிற நன்கொடையில் (3இல்1) மூன்றில் ஒரு பகுதியும் உ.த.மு.க. தலைமைக்கு விடுத்து உதவுதல் வேண்டும். இதற்கான

முகவரி : "தமிழ்நிலம்" உ.த.மு.க.
5, அருணாசல தெரு, திருவல்லிக்கேணி, சென்னை-5

(v) பொதுச் செயலர்க்கு 'நடைமுறைத் தொகுப்பு' அறிக்கையினை விடுப்பது கிளைகளின் கடமையாகும்.

இறுதியாக—

பொதுச் செயலரின் அறிக்கை மீது கருத்தறிவிக்கும் உரிமை உறுப்பினரன்றித் தமிழின நலங்கருதும் அனைவர்க்கும் உண்டு. நேரடியாகப் 'பொருளுதவி' புரியும் அன்பர்களும் 'தமிழ்நிலம்' முகவரிக்குப் பணம் விடுக்கலாம்! தங்கள்,
பறம்புக்குடி, 25-3-90 **பறம்பை அறிவன்**

---

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஓடும் ஓர் உண்மைத் தமிழன்தான் மறந்து விடுவானா? தமிழர்கள் தங்கள் உரிமைக்காகக் கருவி எந்திப் போராடுவதைப் பார்ப்பனர்களும் வடவர்களும் என்றுமே ஒப்ப மாட்டார்கள்; வரவேற்க மாட்டார்கள். ஏனெனில் தமிழீழமோ, தமிழ்நாடோ விடுதலை பெற்றுவிட்டால், பார்ப்பனிய மேலாளுமையோ, இந்து மத மேலாளுமையோ எங்கே ஒழிந்து போகுமோ என்னும் அச்சம் அவர்களிடையில் என்றும் இருந்து கொண்டுதான் இருக்கும். இதில் ஐயமே இல்லை. அதனால் தான் பார்ப்பன மகாதேவனுக்கு இந்தப் பதை பதைப்பும், காழ்ப்புணர்ச்சியும்! இவ்வுணர்வைக் கலைஞர் மேல் வாரியிறைக்கிறார் அவர்!

மேலும் எழுதுகிறார் ஐராவத மகாதேவன், "கருணாநிதியும், தி.மு.க. அரசும் இந்தியப் படையினர் வரவேற்பு நிகழ்ச்சியைப் புறக்கணித்தது, இந்திய அரசையும், முப் படையினரையும், இந்திய மக்களையும் அவமதித்திருக்கும் ஒரு துரதிருஷ்டமான செயலாகும். இந்த விஷயத்தில், கொள்கை அடிப்படையில் தி.மு.கழகத்தின் நிலை எப்படியிருந்தாலும், தமிழக முதல்வருக்கு இந்திய அரசியல் சாசனத்தின் படியும், மரபுகள் படியும் சில கடமைகள் உள்ளன. என்பதைக் கருணாநிதி மறந்திருக்கக் கூடாது...இ'து இந்திய ஒருமைப் பாட்டிற்கு மிகுந்த ஊறு விளைவிக்கும்" என்னும் நச்சுக் கருத்துகளைக் கக்கி விட்டு, இறுதியாகத் "தமிழக முதல்வர் இந்த விஷயத்தில் நடந்து கொண்டவிதம் பற்றித் தேசிய முன்னணி தனது கண்டனத்தைத் தெரிவிக்கும் என்று எதிர்பார்க்கிறோம்" என்று காட்டிக் கொடுப்பு வேலையையும் செய்திருக்கிறார்.

பல்லாயிரக் கணக்கான தமிழரின் உயிரழிவுக்குக் காரணமான இந்தியப் படையைக் கலைஞர் வரவேற்கச் செல்லாதது அவமதிப்பாம்! தமிழர்களைக் கொன்றது மட்டும் கொடுமையில்லையாம்! பாராட்ட வேண்டிய நிகழ்ச்சியாம்!—தினமணியின், பார்ப்பனப் பார்வையில் தமிழர்களைக் கொன்றது கொடுமையில்லாமலிருக்கலாம். ஆனால் கலைஞர் கருணாநிதி தமிழராயிற்றே! ஐராவதம் மகாதேவனைப் போல் வஞ்சக எண்ணமும் காட்டிக் கொடுக்கும் நினைவும் வருமோ, என்பதை ஐராவதன்கள் சிந்திக்க வேண்டும்! 5000 பார்ப்பனர்களுக்கும் பன்னூறு பார்ப்பனத்திகளுக்கும் இந்த நிலை

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# உலகத் தமிழின முன்னேற்றக் கழகம்

## முதல்வர் அறிக்கை!
## புதிய துணைப்பொதுச் செயலர் பதவி அமர்த்தம்

உ. த. மு. க. அன்பர்களுக்கும் ஆர்வலர்களுக்கும்!

பேரன்பின் இனிய தமிழ் நெஞ்சங்களே!

கடந்த இரண்டாண்டுகளாக நம் **உலகத் தமிழின முன்னேற்றக் கழகத்திற்கு**, எதிர்பாராத வகையில் ஏற்பட்ட அரசினர், காவல் துறையினர் தாக்கங்களால், ஆங்காங்கு ஆர்வமுடனும் அக்கறையுடனும் செயல்பட்டுக் கொண்டு வந்த நம் உ.த.மு.க. அன்பர்களிலும் ஆர்வலர்களிலும் பலர் அதிர்ச்சியும் தாக்கமும் உற்று, அவற்றுடன் சிறைப்படுத்தங்களுக்கும் வழக்குகளுக்கும் ஆளாகி, மிகவும் தொல்லையும் துயரமும் கொண்டிருந்த காரணத்தால், நம் கழகம் செயல் குன்றியிருந்தது அனைவர்க்கும் தெரிந்திருக்கும்.

அத்தகைய நடவடிக்கைகளில் நம் உ.த.மு.க. அதிகார அளவில் ஈடுபட்டிருக்கவில்லையென்பது அரசிற்கும் காவல் துறைக்கும் அன்பர்களுக்கும் நன்கு தெரிய வந்திருப்பினும், அரசின் பரப்பரப்பான ஒட்டுமொத்த நடவடிக்கைகளால், மிகவும் தாக்குண்ட ஏதுமறியா நம் அன்பர்கள் சிலர் உளங்குன்றி, உணர்வு தணிந்த நிலையில் இருப்பது, நமக்குப் பெரிதும் வருத்தத்தையும் நெகிழ்ச்சியையும் தந்துள்ளது. அதனாலேயே நாமும், நம் உ.த.மு.க. தொடர்பான எந்த உடனடிச் செயல்பாட்டிலும் இயக்கத்திலும் முடுக்கம் கொள்ளாமல் அமைந்திருக்க வேண்டியிருந்தது.

ஊக்கமுடைய நம் கழகத்தின் இந்த ஒடுக்கம் நம் எதிரிகளுக்கும் பகைவர்களுக்கும், பல வகையான எதிர்ப்பெழுச்சிகளையும் துணிவையும் தந்துள்ளது என்பதைக் கூற வேண்டுவதில்லை. இவ்விடைக் காலத்தில் வடவராட்சியின் இந்தி வல்லாண்மை மேலும் மேலும் கொடிகட்டிப் பறந்துகொண்டிருக்கிறது. இக்கால் நடந்து முடிந்த ஒரு பொதுத் தேர்தலிலும் இரண்டு இடைத் தேர்தல்களிலும் தாய்மொழி, இனம் இரண்டிற்கும் மாறான இந்திரா பேராயமும், அ.தி.மு.கழகமும் அளவுக்கு மீறி, அவற்றின் மேல் தாக்கங்களை ஏற்படுத்தியுள்ளன. இந்திய ஒன்றியத்தில் தனி வல்லாண்மையைப் பெற்றிருந்த தரகு முதலாளிய இராசீவ் அரசு மாறி, சனதா தளம் இணைந்த முன்னணி அமைப்பு ஆட்சியைக் கைப்பற்றியிருந்தாலும், தமிழ்மொழிக்கும், தமிழினத்திற்கும், தமிழ் நாட்டிற்கும் கிடைக்க வேண்டிய, அரசியல், பொருளியல், குமுகவியல் உரிமைகள் இன்னும் கிடைக்காமல், தேசிய இன மீட்சிக்கெனப் போராட்டங்களை நடத்த வேண்டிய நிலையிலேயே நாம் இன்னும் இருக்கிறோம். அதற்காக மக்களைத் திரட்டிப் பல வகையான முயற்சிகளையும் பலவேறு கோணங்களில் செய்ய வேண்டியுள்ளது. இவற்றையெல்லாம் முறைப் படுத்தவும், ஒழுங்கு படுத்திக் கட்டுக் கோப்பான மக்கள் இனப் போராட்டங்களை எழுப்பவும், நம் கழகம் முனைப்புக் கொள்ள வேண்டியுள்ளது. ஏற்கனவே ஏற்பட்ட பலவகை அகப் புறத் தாக்கங்களால் நம் பொறுப்பாளர்களில் சிலரும், ஆர்வலர்களில் சிலரும் சூடுகண்ட உணர்வினராய் சோர்வடைந்திருப்பதாக உணர்கிறோம்.

எனவே, இன்றைய நிலையில், நம் உ.த.மு.க.வை மீண்டும் செயலூக்கத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும் என்னும் கருத்தை, நம்மிடம் நம் கொள்கை ஆர்வமும் செயல்திறமும் கொண்ட மிகப் பலர் வலியுறுத்திக் கூறிய வண்ணம் உள்ளனர். அவர்களின் ஆர்வமும் அக்கறையும், நம் இயக்கக் கொள்கைகளின் தேவைகளையும், அவற்றைச் செயலுக்குக் கொண்டு வரவேண்டிய இன்றியமையாமையையும் நமக்குத் தெளிவாக உணர்த்துகின்றது.

ஆங்காங்கு தொய்வடைந்துள்ள இயக்க அமைப்பாளர்களையும் அன்பர்களையும் ஆர்வலர்களையும், கூடிய விரைவில் சந்தித்துப் பேசவும், கலந்துரையாடல் வழி அவர்களின் கருத்துகளை அறியவும், அவ் வகையில் ஊக்கமழியாதவர்களைச் செயல் நிலைக்குக் கொண்டு வரவும், அதற்கெனத் தற்காலிகத் துணைப்பொதுச் செயலர் ஒருவரை உடனே அமர்த்தம் செய்யவும் வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

இப்பொழுதுள்ள நிலையில் பல ஆய்வுகளுக்குப் பின், உடனடிப் பயன கருதி, நம் இனவியல் அறிஞர் திரு. **பறம்பை அறிவன்** அவர்கள் நம் கழகத்திற்குத் **தற்காலிகத் துணைப்பொதுச் செயலாளராக** அமர்த்தப் பெறுகிறார். அவர் விரைவில் மாதத்திற்கு நான்கு அல்லது ஐந்து மாவட்டங்கள் என்னும் அளவில், அனைத்து மாவட்டங்களிலும் சுற்றுச் செலவு செய்து அன்பர்களிடம் கலந்து பேசி ஆர்வமுள்ளவர்களையும் பொதுத் தொண்டுக்கு முன் வருபவர்களையும் கொண்டு, நம் அமைப்பைக் கட்டமைக்கும் முயற்சியில் ஈடுபடுவார்கள்.

தம் தம் ஊர்களிலும், வட்டம் மாவட்டங்களிலும் உலகத் தமிழின முன்னேற்றக் கழகக் கிளைகளையும், வட்ட, மாவட்ட அமைப்புகளையும் தோற்றுவிக்க விரும்புகிறவர்களும், ஏற்கனவே உள்ள ஊர்கள், வட்டங்கள், மாவட்டங்களில்

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# தமிழ்த் தேசியத் தன்னுறுதி!*

(தொடர்: 2)

## தமிழக வேளாண்மை!

தமிழகத்தில் வேளாண்மை மக்கள் மேலும் மேலும் தாக்குதலுக்கு உள்ளாகி வருகின்றனர். காவிரி கழிமுக (டெல்டா)ப் பகுதியில் 1924-ஆம் ஆண்டு ஒப்பந்தப்படி காவிரிநீர் கிடைக்காததால் இருவிளைவு (போக) வேளாண்மை (சாகுபடி) ஒரு விளைவாகி — அதுவும் புழுதி விதைப்பாகி வருகிறது. இதனால் உழவர்களுக்கு விளைச்சல் தாக்கம். உழவுத் தொழிலாளிகளுக்கு வேலைவாய்ப்புத் தாக்கம்.

காவிரி நீர் சிக்கலால் 29 இலக்கம் குறுக்கம் (ஏக்கர்) பாய்ச்சல் (பாசனப்) பரப்பு தாக்கப்பட்டுள்ளது.

ஏரி மற்றும் வாய்க்கால் பாய்ச்சல் பெறும் நிலப்பரப்பு சுருங்கி வருவதைப் பின்வரும் புள்ளி விளக்கம் விளக்கும்.

| பாசன வழி | மொத்த பாசன நிலப்பரப்பு (இலக்கம் எக்டேர்களில்) | | |
|---|---|---|---|
| | 1983—84 | 1984—85 | 1985—86 |
| வாய்க்கால் | 8.66 | 8.57 | 7.74 |
| ஏரி | 8.07 | 7.15 | 6.72 |
| கிணறு | 9.25 | 10.07 | 10.30 |

[அடிப்படை : An Economic Appraisal 1986-87 தமிழ்நாடு அரசு]

இதனால் துயரடைவோர் உழவர் மக்கள் மட்டுமல்லர், ஒட்டுமொத்த தமிழக மக்களே. தமிழ்நாட்டில் வகுசரியாக ஒருவருக்குக் கிடைக்கும் நிலையில் இருக்கும் (Percapita Availability) அரிசியின் அளவு குறைந்துகொண்டே வருகிறது. இது 1973-74இல் 352 சீரெடை (கிராம்) 1985-86இல் 282 சீரெடை; 1986-87இல் 275 சீரெடை.
அடிப்படை. Tamil Nadu - An Economic Appraisal 1987-88)

தேசிய நீரோட்டம் பேசும் தில்லிக் கோமான்கள் காவிரி நீரோட்டம் வற்றுவதைப் பற்றிக் கவலைப்படுவதே இல்லை. காவிரி நீர்ச்சிக்கலை நடுவர் மன்றத்திற்கு விடுமாறு தமிழகம் கோருகின்ற போதிலும் இந்திய அரசோ நடுவர் மன்றம் அமைக்க மறுக்கிறது. 1956-ஆம் ஆண்டின் மாநிலங்களுக்கிடையேயான தண்ணீர்ச் சிக்கல் சட்டச் சிக்கல்களில் தொடர்புடைய ஒரு மாநிலம் நடுவர் மன்றம் கோரினால் மட்டும் போதாது, இந்திய அரசும் விரும்பினால்தான் நடுவர் மன்றம் அமைக்கலாம் என்று கட்டுப்பாடு போடுகிறது.

விவசாய விளை பொருள்களுக்கு விலையைத் தீர்மானிக்கும் அதிகாரத்தைத் தன்னிடமே வைத்திருக்கும் இந்திய அரசு, நெல், கரும்பு போன்றவற்றிற்குக் கட்டுப்படியான விலை கொடுக்க மறுக்கிறது. இந்தியப் பெருமுதலாளிகளும், அரசு முதலாளியும் மற்றும் பன்னாட்டு முதலாளிகளும் விளைவு செய்யும் வேளாண்மை இடுபொருள்களின் விலை அதிகரித்துக்கொண்டே வருகிறது. வேளாண் மக்களின் நுகர் பொருள்களின் விலையும் அதிகரித்துக்கொண்டே வருகிறது. அந்த விழுக்காட்டில் வேளாண்மைப் பொருள்களுக்கு விலை உயர்வதில்லை. வேலிக்கருவை விறகுக்குச் சந்தையில் கிடைக்கும் விலைகூட கரும்புக்குக் கிடைப்பதில்லை. சர்க்கரை விலை மட்டும் உயரும். சர்க்கரைக்கு இரட்டை விலைக் கொள்கை. கரும்புக்கு ஒற்றை விலைக் கொள்கை.

நெல்லையும் பிற விளைபொருள்களையும் சந்தையில் ஒரு சரக்காகக் கருத இந்திய அரசுத் திட்டமிட்டே மறுக்கிறது. ஆளும் பிரிவினத்தால் சூறையாடப்பட்டு வரும் மக்கள் சினமூற்று அரசியல் முறையாக எழுச்சிகொண்டு விடாமல் தடுப்பதற்காக - உணவுப்பொருள்கள் ஆலைப் பொருள்களைவிடவும் மலிவாய்க் கிடைக்கும் வகையில்-கட்டுப்படியாகாத விலையைத் தீர்மானிக்கிறது, இந்திய அரசு. சர்க்கரை, துணி, வழலை (சோப்பு) முதலாளிகளின் ஊதிய விழுக்காட்டைப் பெருக்குவதற்கு கரும்பு, பருத்தி, கடலை விலைகளைச் செயற்கையாகக் குறைத்து உழவர்களின் வயிற்றிலடிக்கிறது.

உணவுப்பொருள்கள் மக்களுக்கு மலிவாகக் கிடைக்க வேண்டுமென்பதில் இருவேறு கருத்து இருக்க முடியாது. உழவர்களுக்குத் தாக்கம் இல்லாமல் இதைச் செய்யமுடியும். உழவர்களுக்கு உரிய விலை கிடைக்க வேண்டும். அரசு உதவி (மானியம்) கொடுத்து உணவுப்பொருள்களின் விற்பனை விலையைக் குறைக்க வேண்டும். உணவுப் பொருள் (உதவிக்காக) ஆலை முதலாளிகளிடம் புதிய வரி போட்டாலும் தகும்.

உழவாண்மை விளைபொருள்களைப் பிற பண்டங்களைப்போல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது நாட்டின் பொருளியலை உயர்த்தும்.

காலங் கடந்துபோன நிலமுதலாளிய உறவுகளை (Feudal Relations) நீக்கவேண்டும். மாற்றுப்பெயர் (பினாமி) நிலங்களை எடுத்து, உழவர்களுக்கு வழங்க வேண்டும்.

சிறு, நடுத்தர, பெரிய உழவர்களுக்கு உழவு ஓர் ஊதியமான தொழில் என்ற நிலை உருவாக்கப்படவேண்டும்.

Scanned with CamScanner

உழவுத் துறைக்கான சட்டங்களைத் தமிழகச் சட்டப் பேரவை தனது விருப்பப்படி தீர்மானிக்கும் உரிமை இன்றில்லை. ஆளுநர் இசைவு, குடியரசுத் தலைவர் முத்திரை என்ற மூக்கணாங்கயிறுகள் இந்தியப் பேரரசின் கையில் இருக்கின்றன.

## தொழில்:

தமிழ்நாட்டில் தொழில் வளர்ச்சி விழுக்காடு (விகிதம்) படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது. சேலம் உருக்காலைத் திட்டத்தை நிறைவேற்ற இந்திய அரசு மறுத்து வருகிறது.

தொழில் துவங்குவதற்குத் தேவையான அடிப்படைக் கட்டுமான (Infra - Structure) வாய்ப்பு உரிய அளவு உருவாக்கப்படவில்லை. மின் உருவாக்கத்தில் இந்திய அரசின் கொள்கை பெரும் தாக்கத்தை உண்டாக்கியுள்ளது. தங்கு-தடையின்றி மின்சாரம் உருவாக்கம் நெய்வேலி அனல் மின்நிலையம் இந்திய அரசின் கையில். அதன் முழு உருவாக்கம் தமிழகத்திற்குக் கிடைப்பதில்லை. தமிழ்நாட்டில் கிடைக்கும் பழுப்புநிலக் கரியை எடுத்து வேறோர் இடத்தில் அனல் மின் நிலையம் கட்டிக் கொள்ளவும் தமிழக அரசிற்கு அனுமதியில்லை.

1979-80ஆம் ஆண்டில் 1 அளவி (யூனிட்) மின்சாரத்தைத் தமிழகத்திற்கு 26.63 காசுக்கு விற்ற இந்திய அரசு இப்போது 56 காசுக்கு விற்கிறது. (The Hindu 9-12-89). தமிழ்நாடு அரசு நடத்தும் அனல் மின்நிலையங்களுக்கு வடஇந்திய மாநிலங்களிலிருந்து வாங்கப்படும் நிலக்கரிக்கு சுரங்க வாயில் விலை (Pit-head Price) ஒரு கல்லெடை(டன்னு)க்கு உரு. 250. அங்கிருந்து தமிழ்நாடு வந்து சேரும்போது சுமைக் கூலியும் சேர்த்து ஒருகல்லெடையின் அடக்க விலை உரு.600/-மின்சாரக் கட்டணம் உயர்வதற்கான முகாமைக் காரணம் இதுதான் என்கிறார் மின்வாரியத் தலைவர் (The Hindu - 9-12-89). வடமாநிலங்களில் கிடைப்பதைவிட அடக்க விலை குறைவாக தரமான நிலக்கரியை ஆத்திரேலியாவிலிருந்து வாங்கிக் கொள்ள தமிழ்நாடு அரசு கேட்டது. இந்திய அரசு மறுத்துவிட்டது. மின்சாரப் பற்றாக்குறைக்கும் மின் கட்டண உயர்வுக்கும் இந்திய அரசின் அணுகுமுறை முகாமைக் காரணமாகும். தமிழ்நாட்டில் பரவ வேண்டிய ஒளி வெள்ளத்தின் குறுக்கே மலைபோல் நிற்கிறது இந்திய அரசு.

தூத்துக்குடி துறைமுகம், சேதுக்கால்வாய்த் திட்டம்,ஊட்டி வண்ணப்படச் சுருள் தொழிற்சாலை போன்ற திட்டங்களைச் செயல்படுத்த விரும்பவில்லை இந்திய அரசு. அகலத் தொடர்வண்டிப் பாதைத் திட்டங்கள் முழு அளவில் எடுத்துக்கொள்ளப்படவில்லை. கரூர்-திண்டுக்கல்லுக்கிடையே அது நத்தை வேகத்தில் நகர்கிறது. எண்ணெய் தூய்மைசெய்(சுத்திகரிப்பு) ஆலை கட்டுவதற்கும் இன்னும் முன்வரவில்லை.

மாந்தகுலத்திற்கு ஏதம் (அபாயம்) ஏற்படுத்தும் கூடங்குளம் அணு மின் திட்டத்தை மக்களின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் திணிக்கிறது.

தொழில் துறையில் தமிழகத்தின் தேவை, விருப்பம் ஆகியவற்றை இநதிய அரசு பொருட்படுத்துவதில்லை.

இந்திய அரசின் தொழிற்கொள்கை பெரு முதலாளிகளல்லாத தமிழ்த்தேசிய முதலாளிகள் மற்றும் சிறு தொழில் உரிமையாளர்கள் ஆகியோரின் நலன்களைப் பலியிடுகிறது.

சிறு தொழிலான தீப்பெட்டி உருவாக்கத்தில் பன்னாட்டு முதலாளியான 'விம்கோ'வை நுழைய விட்டு, சிறு முதலாளிகளை நசுக்குகிறது. சிறிய தொழில்களுக்கான மூல (கச்சாப்)பொருள் மற்றும் சந்தை வசதிகளைச் செய்து தருவதில்லை. இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் சிறு தொழில்கள் அதிகம். 1986-87இல் இந்தியாவில் மொத்தம் நலிவடைந்த சிறு தொழில்களில் 20% தமிழ்நாட்டில் தான் உள்ளது. (An Economic Appraisal 1986-87.)

தமிழ்நாட்டின் பரம்பரைத் தொழில்களான கைநெசவும், மீன்பிடிப்பும் இந்திய அரசின் பல்துறைத் தொழில் கொள்கைகள் என்னும் சாலைப்பொறிச் (புல்டோசர்) சக்கரத்தில் சிக்கி நசுங்குகின்றன. பெரு முதலாளிகள் மற்றும் பன்னாட்டு முதலாளிகள் நலன்களை இலக்காகக் கொண்டுள்ள துணிக் கொள்கையாலும், அதன் விலைக் கொள்கையாலும் கைத்தறிக்கு ஞாய விலையில் தாராளமாக நூல் கிடைக்கவில்லை. கைத்தறி இனங்களுக்குப்போதிய சந்தை கிடைக்கவில்லை. இந்திய அரசின் பட்டு, மினுகை (சரிகை) விலைக்கொள்கையால் பட்டுநெசவு தாக்கப்படுகிறது; இக்கொள்கை சூரத்தின் ஓராளுமை வணிகர்களின் ஊதிய வேட்டைக்குக் கதவைத் திறந்துவிடுகிறது.

ஆழ்கடலில் மீன்பிடிக்கும் உரிமையை டாட்டா யூனியன் கார்பைடு போன்ற உள்நாட்டு, வெளிநாட்டு, ஓராளுமை (ஏகபோக) நிறுவனங்களுக்கும், பெரும் வணிகர்களுக்கும் இந்திய அரசு விட்டுவிடுவதால் மீனவர்கள் தீராத வறுமையில் தள்ளப்படுகிறார்கள்,

பன்னாட்டு ஓராளுமை (ஏகபோக) நிறுவனங்கள் நமது வேளாண்மை மற்றும் சிற்றூர்ப்புற வாழ்க்கையில் ஊடுருவி, விதை, மாடு, கோழி போன்றவற்றில் மேற்கத்தியச் சார்பை உண்டாக்கி விட்டன. மேற்கத்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி நம் விதை மற்றும் கால்நடைகளின் தரத்தை உயர்த்துவதற்குப் பகரமாக மேற்கத்திய

Scanned with CamScanner

தொழில் நிறுவனங்களையே சார்ந்திருக்கும் போக்கை இந்திய அரசு உண்டாக்கி விட்டது. இப்போக்கு நம் தட்ப, வெப்ப நிலைக்கு ஏற்ப நமது மரபு வழிப்பட்ட செல்வங்களை வளர்ப்பதைத் தாக்கிவிட்டது.

இவ்வாறெல்லாம் இந்தியப் பெருமுதலாளி-களும், பன்னாட்டு ஓராளுமை(ஏகபோக)முதலாளி-களும் தமிழநாட்டின் குமுக, பொருளியல் வாழ்க்கையில் ஒழுங்கின்றிக் குறுக்கிட்டுச் சீர்-குலைப்பதைத் தடுக்க நினைத்தாலும் தமிழகத்தில் உள்ள ஓர் ஆட்சியால் முடியாது.

தமிழ்நாட்டிலோ அல்லது இந்தியாவின் ஒரு மூலையிலோ நுழைவதற்கான உரிமத்தை இவர்கள் தில்லியில் பெற்றுவிடுகிறார்கள்.

இந்தியப் பெருமுதலாளிகள் மற்றும் பன்-னாட்டு முதலாளிகள் ஆகியோர்களின் தொழில்-களைத் தேவைக்கு ஏற்ப அரசுடைமை ஆக்குவது, அல்லது கட்டுப்படுத்துவது என்ற முடிவுகளை மேற்-கொள்ளாமல் தமிழகத்தின் பொருளியல் துறையில் புதிய இலக்குகளை அடையவே முடியாது. இங்கு தொழில் வளர்ச்சியைப் பெருக்கவோ, வேலை-யின்மையை ஒழிக்கவோ முடியாது.

எனவே, பெருந்தொழில்கள், சுரங்கம், தோட்டம் ஆகியவற்றுக்கான உரிமம் தரும் அதிகாரம் தமிழ்த் தேசிய அரசிடம் மட்டுமே இருக்க வேண்-டும்.

தொழிலாளர்களின் வேலை நிலைமை, வாழ்க்கைத் தரம், குடிநாயக உரிமை ஆகிய-வற்றை மேம்படுத்துவதற்குரிய சட்டங்களை இந்திய அரசின் இசைவின்றி உருவாக்கிட இன்று தமிழகத்திற்கு அதிகாரமில்லை. இந்த அதிகாரம் தமிழ்நாட்டிற்கு வேண்டும்.

இப்படிப்பட்ட அதிகாரங்கள் கிடைத்தால் இன்றுள்ள ஒரு மாநில ஆட்சி புரட்சியான சட்டங்-களை நிறைவேற்றிச் செயல்படுத்துமா என்ற கேள்வி எழலாம். மாநில ஆட்சி அப்படிப்பட்ட சட்டங்களை நிறைவேற்றினால் ஆளட்டும்; இல்லை-யேல், அதிகாரமில்லை என்று தப்பித்துக் கொள்-ளும் ஓட்டை அடைபட்டு அம்பலப்படட்டும். புரட்சியான நடவடிக்கைகளை எடுக்கக் கூடிய புதிய ஆற்றல்கள் வரட்டும்; வளரட்டும்.

## பொருள் (நிதி:)

மாநிலத்தில் பல வரிகள் மூலம் பெருகி வரும் பொருள் வெள்ளம் தில்லிக் கருவூலத்தை நோக்கிப் பாய்ச்சப்படுகிறது. மிகக் குறைந்த வருவாய் தரும் விற்பனைவரி மட்டும் மாநில அரசிடம் உள்ளது. அதிலும் பங்கு கொண்டு, பறித்துச் செல்ல நடுவண் விற்பனைவரியைப் புகுத்தியுள்ளது. இந்-திய அரசு, நேர்முக, மற்றும் மறைமுக வரிகள் மூலம் பல்லாயிரங்கோடி உருபாவை ஓராண்டில் தமிழ்நாட்டிலிருந்து தண்டிக் கொள்ளும் ஒன்றிய அரசு ஆட்சி (நிர்வாக) ஆணை விலை உயர்வு (Administered Price rise) மூலமும் ஏராளமாக அவ்வப்போது தண்டிக் கொள்கிறது.

ஆனால், இவ்வளவையும் கொடுத்துவிட்டுத் தமிழகம் ஒன்றிய அரசிடம் கையேந்தி நிற்கிறது. பொருள் ஆணைக்குழு மற்றும் திட்டக்குழு ஆகிய-வற்றின் கடைக்கண் பார்வைக்குத் தமிழகம் காத்திருக்க வேண்டியுள்ளது.

இந்திய ஆட்சியாளர்கள் தங்களது ஒரு முக நோக்கு(பாரபட்ச) அரசியல் சித்து விளை-யாட்டுக்கு இவ்விரு குழுக்களையும் நெம்புகோல்க-ளாகப் பயன்படுத்துகிறார்கள். பொருள் ஆணைக்குழு அரசமைப்புச் சட்ட ஏற்பிசைவு பெற்றிருப்பினும் அது எதை எதை ஆய்வுசெய்ய வேண்டுமென்-பதை ஒன்றிய அரசு வரம்பு கட்டிவிடுகிறது. அக் குழுவை அமைப்பதில் தமிழக அரசுக்குப் பங்கே-தும் இல்லை.

சவகர் வேலைவாய்ப்புத் திட்டம், 'சீவன்தாரா' போன்ற மக்கள் நலத்திட்டங்களை இந்திய அரசு நேரடிப் பொருப்பிலேயே நிறைவேற்றுகிறது.

இவையெல்லாம் பொருள் வழியிலான தேசிய இன ஒடுக்கு முறைக்குச் சான்றுகள்.

## ஆளுமை (நிர்வாகம்:)

அன்று வெள்ளை வல்லரசியம் (ஏகாதிபத்தியம்) பிரிட்டனின் பிடிக்கு உட்பட்ட இ.ஆ.ப. (ஐ.சி.எசு.) ஆளுமையர்களை இந்தியாவிற்கு அனுப்பியது. இன்று தில்லி தனது பிடிக்கு உட்பட்ட இ.ஆ.ப. (ஐ.ஏ.எசு), இ.கா.ப. (ஐ.பி.எசு) அதிகாரிகளைத் தமிழ்நாட்டுக்கு அனுப்புகிறது. இது தமிழ்த்தேசிய இனத்தின் தன்னுறுதி உரிமை-யையும் குறைந்தபட்சக் கூட்டாட்சி முறையையும் தாக்கித் தகர்கிறது.

## கல்வி மற்றும் அலுவல் மொழி:

'நெருக்கடி நிலைக் காலத்தில் மாநிலப் பட்டியலிலிருந்து, பொதுப்பட்டியலுக்கு எடுத்துச் செல்லப்பட்ட கல்வி, இன்னும் அதிலேயே நீடிக்கி-றது. இதன் வழியாகப் புகுந்து இந்திய அரசு புதிய கல்விக் கொள்கையையும், 'நவோதயா' மாதிரிப்பள்ளியையும் கொண்டு வருகிறது. கல்வித் துறையில் புரட்சியான மாறுதல்களைக் கொண்டு வர தமிழக சட்டப் பேரவைக்கு முழு அதிகார-மில்லை.

இந்தி இந்தியாவின் அலுவல்மொழி என்று அரசமைப்புச் சட்டநெறி 343 உறுதி செய்கிறது. வரலாற்றில் முதலில் சமசுக்கிருதம், பின்னர் ஆங்கிலம் ஆகியவற்றின் வல்லாண்மையால் வளர்ச்சி தாக்கப்பட்ட தமிழ் இப்பொழுது இந்தி-யின் ஒடுக்கு முறைக்கு உள்ளாகிறது.

Scanned with CamScanner

தமிழ் உட்பட அனைத்துத் தேசிய இன மொழிகளும் ஒன்றிய அலுவல் மொழிகளாக ஏற்பட வேண்டுமென்ற தமிழகத்தின் கோரிக்கை தவிர்க்கப்படுகிறது. தமிழகத்தின் மொழிப்போர் மறவர்களின் உயிர் ஈகத்திற்கும், அரத்தத்திற்கும் உரிய ஞாயம் இன்னும் கிடைக்கவில்லை.

இந்தி அனைத்து முனைகளிலும் வெகுவேகமாகத் திணிக்கப்படுவதால் தமிழ் இளைஞர்களின் வேலை வாய்ப்பு மற்றும் பதவி உயர்வு, தமிழர்களின் பண்பாடு ஆகியவற்றில் ஒவ்வொரு நிலையிலும் தாக்குதல் தொடர்கிறது; இழப்புகள் ஏற்படுகின்றன.

### வானொலி மற்றும் தொலைக்காட்சி:

வலிமை வாய்ந்த செய்தித் தொடர்புக் கருவிகளான வானொலியும், தொலைக்காட்சியும் இந்திய அரசின் தனியாளுமை (ஏகபோகம்) ஒன்றிய அரசின் விருப்பத்திற்கேற்ப அரசியல், பொருளியல், பண்பாட்டுக் கருத்துகளை இவை கருத்துப்பரப்பல் (பிரச்சாரம்) செய்கின்றன. இந்தி மொழியைப் பரப்புகின்றன. தமிழ்த் தேசிய இன மக்களின் அரசியல், பொருளியல், பண்பாட்டு விருப்பங்களுக்கேற்ப ஒலி-ஒளி பரப்ப வாய்ப்பில்லை. இந் நிறுவனங்களை நிறுவிக் கொள்ளு உரிமையும் இல்லை.

(தொடரும்)

## பன்மொழிப் புலவர் அப்பாத்துரையார் குடும்பத்திற்கு அருள்கனிந்து உதவுங்கள்!

இது தொடர்பான முழு அறிக்கையையும் சென்ற **தென்மொழி** சுவடி: 25, ஓலை. 5, **தமிழ்நிலம்** இதழெண் 134-இல் கண்ணுற்றிருப்பீர்கள். இல்லையானால், இப்பொழுதாவது எடுத்துப் படியுங்கள். படித்தவுடன் உங்கள் உள்ளத்தில் எந்த மூலையிலாவது ஓர் இரக்கவுணர்வு மீதான்றுமானால், இன்றே, இப்பொழுதே உங்கள் கைகளில் உள்ளதைப் பன்மொழிப் புலவர் **அப்பாத்துரையாரின்** துணைவியார்க்குக் கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பி விட்டுத் **தென்மொழிக்கு** ஓர் அஞ்சலட்டையில் செய்தி தெரிவியுங்கள். அப்படியே தங்கள் நண்பர்களிடம் இச் செய்திபற்றிச் சொல்லி, அவரையும் இத் தொண்டுக்கிடையில் ஈடுபடுத்துங்கள். மறவாதீர்கள்.

தமிழக அரசும், கலைஞரும் செய்ய விரும்பாததைத் தமிழன்பர்கள் செய்யட்டும்!

அன்பன்
பெருஞ்சித்திரனார்.

தொகை விடுக்க வேண்டிய முகவரி:
திருவாட்டி அலர்மேலு அப்பாத்துரை.
10, அப்பாத்துரையார் தெரு,
தேனாம்பேட்டை, சென்னை-18.

## முன்னேறிய நாடான உருசியாவிலேயே பெண்கள் பின்னடைவு!

மிகவும் முன்னேறியதும், பொதுவுடைமைக் கொள்கையையே அண்மைக் காலம் வரை மிகத் தீவிரமாகக் கடைப்பிடித்து வந்ததுமான சோவியத்து நாட்டில் கூட இன்னும் பெண்களுக்குச் சம உரிமை வழங்கப் பெறவில்லையென்றும், சில குமுக நிலைகள், சில தொழில் அமைப்புகள் ஆகியவற்றில் ஆண்களின் ஆளுமை அதிகாரம் மிகுந்துள்ளது என்றும், சோவியத்துப் பேரவை அறிஞரும் பெண் அறிவியலறிஞருமான போலினு கொசினு கூறினார்.

“எடுத்துக் காட்டாக சோவியத்து அறிவியல் அமைப்புகளில் நிறைய பெண்கள் பணியாற்றிய போதிலும், மொத்தம் 325 உறுப்பினர்களைக் கொண்ட சோவியத்து அறிவியல் பேரவையில் 3 பேர் மட்டுமே பெண்கள் என்பதும், அதே போல அந்தப் பேரவையில் உள்ள 589 இணை உறுப்பினர்களில் 10 பேர் மட்டுமே பெண்கள் என்பதும் கவனிக்கத் தக்கன” என்று அவர் கூறுகிறார்.

“அத்துடன் அறிவியல் பேரவையில் உயர் பதவிகளுக்கு வருவதில் பெண்களுக்குப் பல இடர்ப்பாடுகள் உள்ளன. அவர்கள் தங்களின் ஆய்வுக் கட்டுரைகளுக்கு ஆதரவாக வன்மையாகப் போராடுவதில்லை. தங்கள் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்கப்படும் என்று அவர்கள் நம்புவதில்லை. மேலும் பலவாறான தொல்லைகளும் அவர்களுக்கிருப்பதைக் கண்டும் அவர்கள் அஞ்சுகிறார்கள். அத்துடன் குடும்பப் பொறுப்புகளிலிருந்தும் அவர்களால் மீள முடிவதில்லை.

இன்னும் சோவியத்து நாட்டில் பெண்கள் தாங்கள் விரும்புகிற பணிகளுக்குப் போக முடிவதில்லை. கிடைக்கின்ற பணிகளையே விருப்பமில்லாமல் அவர்கள் செய்யவேண்டி உள்ளது. இன்னும் சில குமுகாய நிலைகளும், பொருளியல் மெலிவுகளும் அவர்களை முன்னேற விடாமல் தடுக்கின்றன. கல்விச் சிக்கல்களிலும் பெண்களுக்கான அரசு உதவிகள் போதுமானதாக இல்லை, ஆட்சியதிகார முட்டுக்கட்டைகள் அவற்றில் இன்னும் நீங்கவில்லை” என்றும் அவர் குறிப்பிடுகிறார்.

### அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும் கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக்கேட்டுக் கொள்கிறோம். O

# கழிசடை கங்கை!

கங்கை மிகவும் புனிதமான ஆறு என்று இந்து மத வெறியர்களும், பார்ப்பனர்களும் தங்களின் மதக்கொள்கைகளை மக்களின் மண்டையில் திணிக்கப் பலவாறு பேசியும் எழுதியும் வருகின்றனர். மக்களும் தங்களுக்கு இயல்பாக உள்ள மூட நம்பிக்கையாலும், மத மயக்கத்தாலும் அவற்றை உண்மையென்றே நம்பி வருகின்றனர். அவர்களின் அறியாமையை அகற்றும் பொருட்டு **உண்மை** (மலர் 20; இதழ் 28)-இல் ஒரு கட்டுரை வெளிவந்தது. அதன் சாரத்தை மட்டும் அன்பர்கள் பார்வைக்கு இங்கு மீளத் தருகிறோம். அன்பர்கள் படித்து உண்மை உணரட்டும்.

O கங்கை ஆறு அதன் தோற்ற விடத்திலிருந்து, கடலில் கலக்கும் இடம் வரையில் 2525 அ.மா. (கி.மீ) (ஏறத்தாழ 1578 கற்கள்) பாய்ந்து செல்கிறது.

O கரிசு (பாவம்) போக்குவதாகக் கூறப்பெறும் காசி நகரத்தின் கழிசடை (சாய்கடை) நீர் முழுவதும் கங்கையில்தான் நாள்தோறும் பாய்கிறது. சரியாகச் சொல்ல வேண்டும் என்றால் காசியில் மட்டும் நாளும் 2 கோடி குடுவை (காலன்) சாய்கடை நீர் கங்கையில் கலக்கிறது.

O அதுவன்றி, நாள்தோறும் 400 பிணங்கள் கங்கைக் கரையில் எரிக்கப்பட்டுக் கங்கை நீரில் கரைக்கப் பெறுகின்றன.

O ஆண்டுதோறும், பயன்படுத்தத்திற்கு உதவாத ஒன்பதாயிரம் (9000) கிழட்டு மாடுகள் கங்கையில் வீசி எறியப் படுகின்றன,

O காசி நகரில் 2 இலக்கம் பேர் பட்டுத் தொழிலில் ஈடுபட்டுள்ளனர். இத் தொழிலில் உண்டாகும் மருந்துக் கழிவு நீர் முழுவதும் கங்கையில்தான் நாள்தோறும் கலக்கிறது.

O நாள்தோறும் இந்தச் சாய்கடைக் கழிவு நீரில் ஏறத்தாழ 70 ஆயிரம் பேர் குளிக்கிறார்கள்.

O இந்தக் கங்கை உருவாகும் இடமான கங்கோத்ரியில் இவற்றை விடக் கூடுதலாக அருவருப்புக் கலக்கப் படுகிறது. இங்கு வாழ்கிற மக்களுக்குக் கழிவிடமாகப் பயன்படுவதும் இந்தக் கங்கைதான்.

O இந்தியாவில் குழந்தைகள் சாவு 1000க்கு 94 நேர்கிறது. ஆனால் காசியிலும் அதைச் சுற்றியுள்ள இடங்களிலும் 1000 குழந்தைகளில் 135 குழந்தைகள் சாகின்றன—என்று அரசின் புள்ளி விளக்கம் கூறுகிறது. இதற்குக் காரணம் கங்கையின் தூய்மையில்லாத நீர்தான் என்றும் அந்த அறிக்கை சுட்டுகிறது.

O காசியை அடுத்து, கங்கையை மேலும் நச்சு நீராக மாற்றுவது காசியாபாது நகரிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து கழிவுப் பொருள்களில் 'ஒபியம்' (மயக்கவெறிப் பொருள்) அதிக அளவில் உள்ளது. எனவே, இந்தப் பகுதியில் ஓடும் கங்கை நீரைத் தொடர்ந்து குடிக்கும் குரங்குகள் கூட வெறிமயக்கத்திற்கு (போதைக்கு) ஆளாகின்றன என்று சொல்கிறார்கள்.

O பீகார் மாநிலத்தில் கங்கை பாய்கையில் துர்க்காபூர், பொகரோ, பிலாய், டாடா எஃகுத் தொழிற்சாலை ஆகிய தொழிற்சாலைகளிலிருந்தும் இன்னபிற உரத்தொழிற்சாலைகளிலிருந்தும் ஏராளமான அளவில் 'அமோனியா', 'சயனைடு' நைட்ரேட், நைட்ரேட் பீனல்—முதலியவை கங்கை நீரில் கலக்கின்றன. இதனால் பீகார் மாநிலத்தில் மக்களும் வேளாண்மைப் பொருள்களும் பெருமளவுக்குத் தாக்குண்டு அழிவுகள் நேர்கின்றன.

O பாட்னாவில் மட்டும் ஒவ்வொரு நிமயத்திற்கும் 34 முதல் 41 உடல்கள் வரை எரிக்கப்பட்டுக் கங்கையில் கலக்கி விடப் படுகின்றன.

O பாட்டா செருப்புத் தொழிற்சாலையிலிருந்தும், மக்வெல் சாராய வடிகட்டும் தொழிற்சாலையிலிருந்தும் வெளியேற்றப்படும் கழிவுகள் யாவும் கங்கையில்தாம் கலக்கின்றன. இதனால், தூய்மையின்மையைத் தடுக்கும் கழகம (Water Pollution control Board) மேற்படி தொழிற்சாலைகள் மீது வழக்கு தொடர்ந்திருக்கின்றது.

O இவையெல்லாவற்றிற்கும் கொடுமுடி வைத்தாற் போன்று இன்னோர் அஞ்சத்தக்க உண்மையும் வெளியாகியிருக்கிறது. இங்கு, இந்த நீரைக் கொண்டு விளைவிக்கப் பெறும் காய்கறிகளிலுள்ள பூச்சிகளும், புழுக்களும் தண்ணீரில் வேகவைத்த பிறகுகூடச் சாவதில்லையாம்! எத்துணைக் கொடுமை!

O பீகாரை அடுத்து கங்கை பாயும் மாநிலம் மேற்கு வங்கம். இங்கு CIFRI (Central Island Fisheries Research Institute) என்னும் ஆராய்ச்சி நிலையம் இருக்கிறது. இதனுடைய கமுக்க அறிக்கையின் படி, ஊக்ளி ஆற்றில் பிடிக்கப்படும் மீன்களைச் சாப்பிட்டால் கொடுமையான விளைவுகள் ஏற்படும் என்று தெரிகிறது. காரணம் இந்த மீன்கள் அந்த அளவுக்குக் கழிவு, வேதியல் பொருள்களால் தாக்குறுவதே ஆகும். இந்த ஆராய்ச்சி நிலைய அறிக்கையை வெளியிட்டால் மக்களிடையே ஏற்படும் விளைவுகளை எண்ணி அதிகாரிகள் இந்த அறிக்கையை இன்னும் கமுக்கமாகவே வைத்திருக்கிறார்கள்.

O கங்கை நீரினால் மிகவும் தாக்கப்பட்டுள்ள நகரம் கல்கத்தாதான். இங்கு கங்கை பாயும் சம வெளியில் மட்டும் 296 தொழிற்சாலைகள் உள்ளன. இந்த ஆலைகளின் கழிவுப் பொருள்கள் அனைத்தும் கங்கையில் கலப்பதால் அதன் விளைவுகளை எண்ணிப் பார்த்தாலும் கூட உள்ளம் நடுங்கவே செய்யும்.

(தொடர்ச்சி 12-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

# துணைப் பொதுச் செயலர் அறிவனாரின் அறிவிப்பு!

## அறிவிப்பு-1

### உலகத் தமிழின முன்னேற்றக் கழகம் நமது கழகம். இதனியக்கம் நமதியக்கத்தில் உள்ளது! எனவே, செயல் புரிய வருக!

தமிழினமே,

பாவலரேறு பார்வையில் பட்டுத் தளிர்த்த பறம்பை அறிவன், ஓரியக்கத்தையும் கட்டி உயர்த்திய, பட்டறிவு அற்றவன்! இவனை நம்பி இறங்கலாமா? இறங்கு துறையே நீச்சாக இருக்குமே என்று தயங்குகின்றவர்களைக் காண்கின்றேன்.

ஆனால், ஒன்று. என்னையும் என் தேவையையும் அறிந்துதான் 'கழக முதல்வர்' என்னைப் பொதுச் செயலர் என அறிவித்துள்ளார்! இந்த நம்பிக்கை எனக்கும் உங்களுக்கும் உள்ளதென்றே கருதுகிறேன். ஆகவே, நாம் அமைப்புப் பணியில் கவனம் வைப்போம். உ.த.மு.கழகத்தை மக்களின் இயக்கமாக மாற்றுவோம்!

நாம் அப்படி என்னதான் செயலை உருவாக்கப் போகிறோம், நமக்கேது பொருள்? நமக்கேது ஆள்? நமக்கேது படை?என்று கேள்விக் கேட்டுக் கொண்டிருப்பவர்கள் கொஞ்சம் இறங்கிப் பாருங்கள். நம்மைப் போலவே நம் மக்களும், என்பது புரியும். அவர்களிடம் உ.த.மு.க.வின் தேவையை உணர்த்துவோம் முதலில்!

தமிழன் என்கிற பெருமையோடு நாம் இன நலப் பணியில் ஈடுபடுவோம்!

உலகம் பரவியுள்ள தமிழின ஒற்றுமைக்கும் உயர்வுக்கும் பாடுபடத் தமிழகத்திலிருந்து முன் முயற்சி முளைத்துள்ளது. அதுதான் உ.த.மு.க.

உலகில்...இலங்கை, மலையகம், சிங்கப்பூர், மொரீசியசு, மற்றும் 'இந்தியத் துணைக்கண்டத்தின்' பிற பகுதிகளில் உள்ள தமிழரின் முன்னேற்றம் நமக்கு முகாமையானதாகும்!

உ.த.மு.க தமிழின முன்னேற்றத்தை உலகக் கண்ணோட்டம் கொண்டு பார்க்கும். தன் செயலைத் தமிழகத்தோடு இறுக்கிக் கொள்ளாது.

எந்தக் கட்சி, இயக்கங்களுடனும் தன்னை அடிப்படுத்திக் கொள்ளாது உ.த.மு.க.! அதேவேளை, வன்முறைக் கெதிராகப் போராடும்! அரசும் மக்களும் முரண்பட்டால், மக்கள் பக்கம் நிற்கும் ஓர் உழைப்பியக்கம் உ.த.மு.க.

இதன் வளர்ச்சி, செயல்கள் புறவய அகவிய வளர்ச்சிக் கேற்ப அமையும்!

உ.த.மு.க.வின் உயர்ந்த ஏழு கொள்கைகளை உயர்த்திப் பிடிக்கும்;

கடந்த காலம் பற்றியும்—கழகம்
நடக்க வேண்டிய பாதை பற்றியும்
உங்கள் பங்குபற்றியும்
முதலில் எழுதுங்கள்.
பிறகு பேசுவோம் நேரில்!

1-3-90 · அன்புடன்,
பறம்புக்குடி. **பறம்பை அறிவன்**

## அறிவிப்பு-2

### உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகளும் நமது சிந்தனைகளும்- ஒரு செயலுக்கு வித்துகளாக!

தமிழினமே,

**1. தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்.**

அ) தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம் சார்ந்த பல்வேறு முயற்சிகள்.

பாட்டாக, கதைப் படைப்பாக, நாடகமாக, பாவியமாக மலர்ந்துள்ளன. இவை பற்றிய தொகுப்பு முயற்சியில் ஈடுபடுங்கள். இதன் பொருட்டு வீடுதோறும் நூலகம் அமையுங்கள்; இல்லையேல்,ஊருக்கொரு நூலகம் படிக்கும் பழக்கம் உள்ளவரால் உருவாகட்டும்!

ஆ) பாவலரேறு, பாரதிதாசன் உள்ளிட்ட நம் சார்புப் படைப்பாளரை ஒப்பீட்டளவில் உணர்ந்து பயில ஆய்வு அரங்கங்களைக் கட்டிடக் கலந்துரையாடல் செய்க—அவற்றைத் தொகுத்துத் 'தமிழ்நிலம்' இதழ்க்கு விடுத்து உதவுக.

**2. சாதியற்ற—மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்.**

அ) சாதியை மறுத்துத் திருமணம் புரிந்தவர்க்குப் பாராட்டும் உதவியும் செய்திடுக.

ஆ) சாதி-மதச் சண்டைக் கெதிராகக் கருத்துப் போர் புரிக.

இ) சாதி, மதப் பூசலை உருவாக்கும் சூழலை ஆராய்ந்து தொகுத்திடுக.

**3. இழிவுகளும், பூசல்களும் ஏமாற்றும் இல்லாத அரசியல்.**

அ) அரசியல் பற்றிய ஆய்வுமுறையை வள்ளுவத்திலிருந்து தொடங்குங்கள்.

ஆ) மார்க்சு முதல் இன்றுவரை வளர்ந்துவரும் அரசியல் நிலைமைகளைப் படியுங்கள்

இ) தமிழின மீட்சிக்கான அரசியல் புரிதலைத் தொகுத்தளியுங்கள்.

**4. தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்.**

(தொடர்ச்சி 3-ஆம் பக்கம்)

# குடிநாயக மரபுகள் சீர்குலைந்து விட்டன!

இந்தியாவில், கடந்த இருபது ஆண்டுகளில் பல குடிநாயக அமைப்புகள் சீர்குலைந்து விட்டன. தேர்தலின்போதும், அதற்குப் பின்னரும் நடந்த மோதல்களில் நூறு பேருக்கு மேல் உயிரிழந்துள்ளனர் என்பதும், பல நூறு பேர் காயமடைந்துள்ளனர் என்பதும், குடிநாயகப் பண்புகளுக்கு ஏற்பட்ட கேடுகளையே குறிக்கின்றன. ... இந்த நிலையில் தேர்தலில் நடைபெறும் தில்லுமுல்லுகள் குடிநாயகத்திற்கு எதிரான வழிமுறைகள் தாம். இந்தக் குற்றச்சாட்டு எல்லா அரசியல் கட்சிகளுக்கும் பொருந்தும். அரசியல் வாழ்வில் திருடர்களும், குமுகாயக் கயவர்களும், பேரளவில் புகுந்திருப்பது தான் இவற்றுக்கெல்லாம் காரணம்.

அரசியலில் குற்றவாளிகள் கலப்பு, காவல் துறையில் அரசியல் கலப்பு என்பவை ஒரே நாணயத்தின் இரண்டு பக்கங்கள் தாம். இரண்டும் ஒன்றுக்கொன்று உறுதுணையாக விருக்கின்றன. இவையின்றி மற்ற அரசுத் துறைகளிலும் இத்தகைய குறைபாடுகள் இருக்கத்தான் செய்கின்றன. நிலையான, ஒருசார்பற்ற, கட்சிக் கலப்பற்ற ஆட்சியமைப்பு இல்லாமல், எந்த நாடும் பெரிய விலைவுகளைச் செய்துவிட முடியாது என்பது வரலாற்றின் படிப்பினையாகும்.

பொதுநலத் தொண்டைத் தந்நலனுக்கான ஏணியாக அரசியல் காரர்களும், அதிகாரப் பிரிவினரும் பயன்படுத்தும் போது, இந்த இருசாராரும் கூட்டுச் சேர்ந்து சட்டத்தை மீறுவதும், ஆட்சி நடைமுறையமைப்பை அதிகாரிகள் முடமாக்குவவதும் எளிதில் நடந்து வருகின்றன. புலன் உசாவலும், உளவுப் பிரிவுகளும் உள்பட காவல்துறை அமைப்பும் கூட இவ்வாறுதான் நடந்து கொள்கின்றன. இவ்வாறு அரசியல்காரர்களும் அதிகாரப் பிரிவினரும் கூட்டுச் சேர்ந்து சுரண்டலில் ஈடுபடும்போது, குடிநாயக நடைமுறைகளுக்கும், பொது மக்களுக்குந்தாம் பெருத்த தீங்குகள் ஏற்படுகின்றன.

சட்டத்தின் ஆளுகையையும் அதனுடன் தொடர்புள்ள ஏற்பாடுகளையும், நடைமுறைப் படுத்த வேண்டிய அமைப்புகள், நலமாக இல்லாத நிலையில், அல்லது அவை வழிதவறி நடக்கத் தாங்களாகவே முன்வருகின்ற நிலையில். இத்தகைய தீமை ஏற்பட்டதற்குக் காரணங்கள் யாவை என்பதை நாம் ஆராய்ந்து பார்க்க வேண்டும்.

"நல்ல நலமுள்ள ஒருவரின் உடலில் புற்று நோய்க் கண்ணறைகள் ஏற்பட்டால், அந்த உடலின் இயற்கையான நோய் எதிர்ப்பு ஆற்றல் அவற்றை அழித்து விடும். இந்த எதிப்பு ஆற்றல் இல்லாத உடம்பில் நோய்க்கட்டி பெரிதாக வளர்ந்து உயிருக்கே ஏதம் (ஆபத்து) ஏற்படுத்தும். ஆகவே புற்று நோய் என்பது வெளித்தாக்குதல் அன்று. உள் வலிமையின் விளைவே"—இவ்வாறு மருத்துவ அறிஞர் ஒருவர் குறிப்பிடுகின்றார்.

அமெரிக்காவில் 1967-இல் இருந்த குடியரசுத் தலைவர் சான்சன் ஆட்சியின் போது, அக்கால் நேர்ந்த சீரழிவுகளை ஆராய்வதற்கென்று உயர் மட்ட ஆய்வுக்குழு ஒன்று அமைக்கப் பெற்றது. அக்குழு வரலாற்றடிப்படையில் மக்கள் குமுகாயங்கள், நாகரிகங்கள் ஆகியவற்றின் எழுச்சி, வீழ்ச்சிகளுக்கான காரணங்களை அந்தக் குழு தன் அறிக்கையில் குறிப்பிட்டது. மாந்த வரலாற்றில் மிகச் சிறந்த நாகரிகங்களைப் பெற்றிருந்த கிரேக்க, உரோம நாடுகள் வீழ்ந்ததற்கு அவ் விளத்தவரின் அரசியல் உட்பூசல்கள்தாம் மிக வலிவான காரணங்கள் என்பதை நினைவில் கொள்ளுதல் வேண்டும். இந்தப் பட்டறிவுகளையும் பாடங்களையும் நாம் கவனத்தில் கொண்டு எடுக்க வேண்டிய நடவடிக்கைகளை உடனே எடுக்கா விடில் இங்கும் அதே அழிவுகள் உறுதி.

இன்றைய சூழ் நிலையின் குமுகாயத்தில் தமக்கென ஒரு சாய்காலை உயர்த்திக் கொள்வதற்கு ஏதாவது குற்றத்தில் ஈடுபடுவதே சரியான வழி என்றாகி விட்டது. அரசியல் நிறுவனங்களில் குண்டர்கள் இடம்பெற்று வருகின்றனர். குண்டர் குழுக்கள் அரசின் அதிகார அமைப்புகளை முடமாக்குகின்றன. அதிகார வட்டாரங்களில் அவர்களுக்கு மிகுந்த சாய்கால் ஏற்பட்டிருக்கிறது. அவர்களால் எதையும் செய்ய முடிகிறது. அரசியல் நிலைகளிலும் அவர்கள் புகுத்திருப்பதால் நீண்டகால அடிப்படையில் கீழான விளைவுகள் ஏற்படும். வன்முறையின் மூலம் அரசியல் சாய்கால் பெறுவதால் தேர்தல் காலங்களில் அஞ்சத்தக்க விளைவுகள் காணப்படுகின்றன.

தொடக்கக் காலங்களில் இத்தகைய குண்டர்களைத் தேர்தலில் பயன்படுத்தி அரசியல்காரர்கள் வெற்றி பெற்று வந்தனர். இப்பொழுது குண்டர்களே நேரடியாக அரசியலில் ஈடுபட்டுப் பதவிகளைக் கைப்பற்றி வருகின்றனர். குண்டர்களின் உதவியுடன் அரசியலில் பதவிகளைப் பெற்ற அரசியல்காரர்கள், பின்னர் அவர்களின் கைப் பாவைகளாக ஆகி அவர்களுடைய அழிம்புகளுக்குப் பாதுகாப்பாக இயங்க வேண்டியிருக்கிறது. இவ்வகையில் அரசியல்காரர்களுக்கும் குமுகாயக் கேடர்களுக்கும் இடையே நிலையான கூட்டு ஏற்பட்டு விட்டது. நாட்டின் சில பகுகளில் இந் நிலை அதிக அளவில் காணப்பெறுகிறது.

அறநெறிச் சுக்கானை இழந்த படகுபோலச் சென்று கொண்டிருக்கும் இன்றைய பொது வாழ்வில் ஒழுக்க நெறிகளை விட அரசியல் நோக்கங்களே முகாமையாகி விட்டன. அரசியல், குற்ற

(தொடர்ச்சி 12ஆம் பக்கம்)

Scanned with CamScanner


ஏற்படுத்தப்பட வேண்டும். இந்தப் பகுதிக்கென உள்நாட்டு அரசியல் அமைப்பியல் சட்டத்தைத் தாங்களே இயற்றிக் கொள்ளும் அதிகாரம் தங்களுக்குத் தரப்பட வேண்டும். வெளியுறவுத்துறை, பாதுகாப்பு, செலாவாணி, பொதுச் செய்தித் தொடர்பு ஆகிய துறைகள் மட்டும் நடுவண் அரசிடம் இருக்கலாம். இந்தக் கோரிக்கைகள் தாம் சீக்கியர்களின் அரசியல் கொள்கைகள்!

—சிம் ரஞ்சித் சிங் மான்.
தலைவர், மான் அகாளி தளம்.

## தற்கொலை முயற்சி சட்டப்படி தவறன்று!

தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்வதற்குத் தண்டனை அளிக்க, இந்திய குற்றத் தண்டனை நெறித் தொகுப்பின் 309-ஆவது பிரிவு, இந்திய அமைப்பியல் சட்டத்திற்கு முரணுவது என்று, மேற்படி குற்றஞ் சாட்டப் பெற்ற ஒரு வழக்கில் பம்பாய் உயர் நெறி மன்றத்தின் நடுவர்கள் பி.பி.சாமந்த், பி.சி.கோல், சே.பாட்டீல் ஆகியோர் தீர்ப்பு அளித்துள்ளனர்.

---


(...செய்தித்தாள் பதிவுச் சட்டம் 195[illegible])
19-ஆ. ஆ. (விதி 8-ஆம் கட்டளைப்படி)

| | | |
|---|---|---|
| 1. வெளியிடும் இடம் | : | சென்னை |
| 2. காலமுறை | : | மாதம் ஒருமுறை |
| 3. அச்சிடுவோர் பெயர் | : | திருவாட்டி. மா. தாமரை |
| இனம் | : | தமிழர் |
| முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை-5 |
| 4. வெளியிடுவோர் பெயர் | : | திரு. பெருஞ்சித்திரனார் |
| இனம் | : | தமிழர் |
| முகவரி | : | தென்மொழி அச்சகம் சென்னை-5 |
| 5. ஆசிரியர் பெயர் | : | திரு. பெருஞ்சித்திரனார் |
| முகவரி | : | சென்னை-5 |
| ஒரு விழுக்காட்டிற்கு மேல் முதலீடு செய்துள்ள தாளிகை உரிமையாளர், கூட்டாளர் இவர் தம் பெயர்களும், முகவரிகளும் | | திரு. பெருஞ்சித்திரனார் சென்னை-5. |

பெருஞ்சித்திரனாராகிய நான் மேலே குறிக்கப்பட்டுள்ள விளக்கங்கள் யாவும் நான் அறிந்தவரை உண்மையென்று உறுதி கூறுகின்றேன்.

பெருஞ்சித்திரன்
(ஒப்பம்)

---

வியல் கூட்டுக் காரணமாக, குமுகாயத்தில் அடிப்படையான சட்டத்தின் ஆட்சி பெரிதும் சேதமடைந்திருக்கிறது.

ஒய்வு பெற்ற முன்னாள் காவல்துறை அதிகாரி பி.ஆர். இராசகோபால் எழுதிய ஒரு கட்டுரையின் கருத்துகள்.

---

(9 ஆம் பக்கத் தொடர்ச்சி)

O இவ்வாறு மக்களில் பொது நலன்களுக்கு மிகு கேடு செய்யும் கங்கையைப் புனித ஆறு என்று மக்களை ஏமாற்றிப் பல்லாயிரக் கணக்கான பார்ப்பனர்கள் வயிறு கழுவி வருகின்றனர்.

—மாடாகுடி. இரா. சம்பந்தன்.

---

(4-ஆம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து இயங்க பொறுப்பாளர்களும் உடனடியாக நம் துணைப்பொதுச் செயலர் திரு. பறம்பை அறிவன் அவர்களிடம் தொடர்புகொள்ளக் கேட்டுக் கொள்கிறோம். அவர்களின் முகவரி:

| | |
|---|---|
| திரு.பறம்பை அறிவன். | பெருஞ்சித்திரனார். |
| திருவள்ளுவர் நகர் | முதல்வர் |
| பறம்பக்குடி-623707, | சென்னை-5 |
| முகவை மாவட்டம். | 30-3-90. |

---

(3-ஆம் பக்கத் தொடர்ச்சி)

நேர்ந்திருந்தால், தினமணி இந்தியப் படையைப் போய் மாலைப்போட்டுக் கை கொடுத்து வரவேற்றிருக்குமா என்பதற்கு ஐராவதம் விடைக்கூறட்டும்! தமிழினம் அழிந்து போவதில் மகாதேவன்களுக்குள்ள ஆவலுக்குக் கலைஞர் மேல் அவர் சுமத்தும் குற்றச்சாட்டுகளே தக்க சான்றுகள்!

---

அப்பாத்துரையார் குடும்பத்திற்கு
அன்பளிப்புச் செய்யுங்கள்!

---

### உ.த.மு.க.வின் உயர்ந்த கொள்கைகள்!

1) தூய்மையான தமிழ்மொழி முன்னேற்றம்!
2) சாதியற்ற, மத வேறுபாடற்ற சமநிலைக் குமுகாயம்!
3) இழிவுகளும், பூசல்களும், ஏமாற்றும் இல்லாத அரசியல்!
4) தமிழ்த் தேசிய இனத்திற்குப் பொருந்திய பொதுவுடைமைப் பொருளியல்!
5) மனம், அறிவு, வாழ்க்கை இவற்றை வளப்படுத்தவும், நலப்படுத்தவுமான அருவருப்பற்ற கலை வளர்ச்சி!
6) பழந்தமிழ் மரபுக்கும், மாந்தவியல் சிறப்புக்கும் ஒத்த பண்பாட்டுப் பரிமாற்றம்!
7) எல்லாவற்றிலும் காலத்திற்கேற்ற அறிவியல் அணுகுமுறை!

---

சிந்தனைக்கு • 53

பணம், பதவி, அதிகாரம் இந்த மூன்றாலும் அழிக்க முடியாத கொள்கையாளனே உண்மையான மக்கள் தொண்டன்!

(மாதம் இருமுறை வெளிவரும்) இதழ் எண்- 136.

அனுப்புதல்:

**தமிழ்நிலம்**

5. அருணாசலத் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை-5

தொலைபேசி எண்: 847829;

உறுப்பினர்:

| | |
|---|---|
| தனி இதழ் விலை | உரு. 1-00 |
| ஆண்டுக் கட்டணம் | உரு. 50-00 |
| அரையாண்டுக் கட்டணம் | உரு. 25-00 |

தமிழர் ஒவ்வொருவரும் கட்டாயம் படிக்க வேண்டிய இதழ்கள்! தமிழ்நிலம், தென்மொழி, தமிழ்ச்சிட்டு!

ஆசிரியரும், வெளியிடுபவரும்:
பாவலரேறு பெருஞ்சித்திரனார்,
அச்சிடுவோர்: தென்மொழி அச்சகம்,
5, அருணாசலத் தெரு, சென்னை-5.

TN/MS(C)657

Scanned with CamScanner